அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

51 | T | I

முதலாந் தவணைப் பரீட்சை– தரம் 12 – 2018

**First Term Test - Grade 12 - 2018**

சுட்டெண் : ........................

## சித்திரக்கலை - I
## Art - I

காலம் : 3 மணி

**அறிவுறுத்தல்**

- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி –I**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளலேயே விடை தருக. ஒவ்வொரு வினாவுக்குரிய சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


**பகுதி II**

- மூன்று உபதொகுதிகளை கொண்டது. ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி –I இன் வினாவுக்கான விடைகளை எழுதிய பின்னர், பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து கையளிக்குக.


## பகுதி -I

- 1 – 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையை கீழே தரப்பட்டுள்ள **A, B, C, D, E** ஆகிய செதுக்கல்களின் படங்களில் இருந்து தெரிவு செய்க.


**A**


**B**


**C**


**D**


**E**

01. A எழுத்தினால் குறிப்பிடப்படும் காவற்கல் காணப்படுவது,
1. இரத்தின பிரசாதயவில்
2. பொலனறுவை வட்டதாகே அருகில்
3. குட்டம் பொக்குன
4. ஸ்ரீமா போதி முன்னால்
5. அபயகிரி விகாரையில்

(.......)

02. பரணவிதாரண ஆராய்ச்சியாரலால் B எழுத்தால் காட்டப்படும் சிற்பம் பற்றி கருத்தாவது,
1. வீரன் ஒருவனும் அவனது மனைவியும்
2. சிவன் பார்வதி
3. சாலியகுமாரனும் அசோக மாலாவும்
4. ராதை கிருஷ்ணன்
5. காதலன் காதலி

(.......)

03. C எழுத்தால் காட்டப்படுவது அனேபிண்டு செல்வந்தன் ஜேதவராமயவை காணிக்கயைாக் கொடுத்தல்
1. சாஞ்சிதோரணம்
2. பாறுத் செதுக்கல்
3. அமராவதி தூபி
4. அனுராதபுர கல் செதுக்கல்
5. எல்லோரா

(.......)

04. D எழுத்தால் காட்டப்படுவது சாஞ்சிதோரண செதுக்கலாகும்.
1. இது புத்தருக்கு பதவி வழங்கல்
2. இல்லறவாழ்க்கையைத் துறத்தல்
3. புத்தர் கிம்புலவஸ்த புரததிற்கு வருதல்
4. புத்தர் சங்கஸ்ஸ புரியை அடைதல்
5. ஜாதக கதை (.......)

05. E எழுத்தால் காட்டப்படுவது நாமர் மன்னரின் பழைய ஆக்கங்களிடையே கிடைக்கும் செதுக்கல் ஆக்கமாகும்.
1. நாமர் மன்னரின் வெற்றியை குறிக்கும் நிகழ்வு
2. மென்குறே அரசனும் அவனது மனைவியும்.
3. ஆநோபிஸ் தெய்வமும் மனைவியும்.
4. கா ஆமென் அரசனும்
5. பாரா மன்னரின் செயல் (.......)

- **6 – 10 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையை தெரிவு செய்க.**

06. மிருகவரிசையில் இருந்து எருதை நீக்கி உருவாக்கப்பட்டது.
1. அநுராதபுர சந்திரவட்டக்கல்லில்
2. பொலன்னறுவை சந்திரவட்டக்கல்
3. கம்பளை சந்திரவட்டக்கல்
4. தம்பதெனி சந்திரவட்டக்கல்
5. கண்டிக்கால சந்திரவட்டக்கல் (.......)

07. சித்திரங்களில் பின்னனிக்கு சிவப்பு நிறம் பாவிக்கப்பட்ட சித்திரங்கள் காணப்படுவது
1. அநுராதபுர காலத்திற்குரிய சித்திரம்
2. பொலனறுவை யுகத்திற்குரிய சித்திரம்
3. கண்டியுகத்திற்குரிய சித்திரம்
4. கண்டி காலத்திற்குரிய சித்திரம்
5. இந்திய அஜந்த சித்திரம் (.......)

08. பிக்குமார் போயா தின கருமங்கள் நிறைவேற்றுவதற்காக ஒன்று கூடிய கட்டிடம்
1. ஜந்தாகார 2. பதானகர 3. போதிகர 4. உபோசத்தகர 5. ஆசனகர (.......)

09. சித்திரங்களில் இருபரிமாணத் தன்மை வர்ணப்பாவிப்பில் காட்டுவது.
1. சீகிரிய ஓவியத்தில் 2. எம் சார்லிஸ் இன் ஓவியத்தில் 3. அநுராதபுர சித்திரங்களில்
4. எகிப்திய சித்திரங்களில் 5. அஜந்தா சித்திரங்களில் (.......)

10. சித்திரம் வரையும் போது கவனிக்க வேண்டியது கோட்பாடு
1. வர்ணம் 2. இரேகை 3. சமநிலைத்தன்மை 4. வடிவம் 5. சந்தம் (.......)


- **11 -15 வரையான வினாக்களுக்கு 1 -7 வரையான படங்களை அவதானித்து விடையை தெரிவு செய்க.**


1.


2.


3.


4.


5.


6.


7.

11. இங்கு காணப்படும் பெண்வடிவங்ளிடையே இரேகைகளை மையமாக கொண்டு வரையப்பட்ட பெண் வடிவம்.
1. 4,6 2. 5,3 3. 4,2 4. 5,2 5. 3,1 (.......)

12. இந்த ஓவியங்களில் இலங்கை கலாசங்க ஓவியரின் நிர்மாணமானது
1. 7,1 2. 2,3 3. 4,3 4. 5,7 5. 5,3 (.......)

13. பிரஸ்கோ புவனோ முறைகளில் வரையப்பட்ட ஓவியமானது,
1. 3 2. 2 3. 4 4. 7 5. 6 (.......)

14. இந்த சித்திரங்களில் யதார்த்த வாதிகளின் ஓவியமானது,
1. 6,4,1 2. 2,5,6 3. 1,5,7 4. 3,1,5 5. 4,2,1 (.......)

15. வியப்பு எனும் இரசனை உண்டாக்கும் வித்தில் பீதிணை வெளிப்படுத்தும் பெண் வடிவம்
1. 1 2. 6 3. 7 4. 4 5. 3 (.......)

- **16 -20 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

16. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களில் பெரும்பாலாக காணப்படுவது.
    1. மனிதவடிவமும், சுற்றாடலில் காணப்படுபவையும்.
    2. மனிதனின் குணப்பண்புகள் நம்பிக்கை
    3. மனிதருக்கும் மிருகங்களுக்கும் உள்ள தொடர்பு
    4. வேட்டையாடுதலை அதிகரித்தல், ஆவிகளுக்கு பூஜை செய்தல், பொழுதை கழித்தல் போன்ற விடயங்கள்
    5. மனித ஆண் பெண் வடிவங்கள் பொதுவான குறியீடுகள். (.......)


17. அசோக தூபிகளுக்கிடையே சாம் பூர்வா தூணின் உச்சியல் காணப்படுவது.
    1. சிங்க வடிவம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
    2. எருதின் வடிவம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
    3. சிவனுக்கு பூஜைசெய்யும் நான்கு சிங்க உருவங்கள்
    4. குதிரைகள் எருதுகள் சிம்ம உருவங்கள் என்பன செதுக்கப்பட்டுள்ளன.
    5. உசஸ்வாதி (imoressionsim) சம்பந்தமானவை காணப்படுகினறன. (.......)

18. இலங்கை கலை சங்கத்தில் ஓவியர்கள் பின்பற்றும் கலையம்சம்
    1. (Naturalism) நடைமுறையிலுள்ள ஓவியத்தை
    2. (Reahsm) அதே விதத்தில் காட்டுதல்
    3. (Academic Reahsm) பிரித்தானிய ரோயல் அக்கடமி ஐ அடிப்படையாகக் கொண்டு
    4. (idealism) கிரேக்க அலைவடிவவாம் உருவாகியது
    5. (impressionism) உரிய நிகழ்வுகளை மீள் நிர்மாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல். (.......)

19. இலங்கையில் உள்ள காவற் கற்களில் பெண்வடிவ காவற்கல் காணப்படும் கொரவக்ககல்
    1. அநுராதபுர இரத்தின பிரசாயவில் உள்ளது.
    2. அநுராதபுர இராணி மாளிகையில் உள்ளது.
    3. பொலன்னறுவை வட்டதாகேயில் உள்ளது
    4. பொலன்னறுவை புத்த சிலைகளுக்கு அருகில் உள்ளது.
    5. பொலன்னறுவை இலங்கா திலக பிலிமகேயில் உள்ளது. (.......)

20. சிந்து வெளி நாகரீகத்தில் கண்டெடுக்கப்பட்ட உலோக சிற்பமானது எது?
    1. பூசாரி நிர்மாணம் 2. கவந்த சிற்பம் 3. நடனமாது
    4. தாய் தெய்வம் 5. யோகாசனத்தில் வீற்றிருக்கும் தெய்வவடிவம். (.......)

- **21 – 25 வரையான வினாக்களுக்கு சரியான விடையை முன்னால் உள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் உருவப்படங்களை அடிப்படையாக் கொண்டு விடையை தெரிவு செய்க.**



21. இதில் காட்டப்படும் ஆசனகர
    1. அநுராதபுர யுகத்திற்குரிய போதிசத்துவர் புத்தர்நிலையை அடையும் போது வீற்றிருந்த ஆசனத்தை காட்டுவதாகும்.
    2. அநுராதபுரக்காலத்தில் புத்தர் சிலை வைக்கும் ஆசனம் ஆகும்.
    3. புத்தர் இலங்கை வந்து வணங்கிய இடமாகும்.
    4. பூவும் பூசை பொருட்களும் வைக்கும் இடமாகும்.
    5. அநுராதபுரக்காலத்தில் இறுதி காலகட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.......)



22. இந்து நதிக்கரை நாகரீகத்தில் காணப்பட்ட குளிக்கும் தடாகமாகும். இது
    1. நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
    2. பிரதான நகரங்கள் இரண்டையும் மையமாகக்கொண்டு அமைக்க்பபட்டுள்ளது
    3. நகரங்களுக்கு வெளியே அமைக்கப்பட்டது.
    4. உட்புற நகரத்தில் அமைக்கபபட்டது
    5. இந்து நதிக்கு அருகில் உள்ள நதிக்கரைக்கு அருகில் உள்ளது. (.......)



23. ஹங்குரங்கெத்த பொத்குல் விகாரை தூபியாகும்.
    1. அநுராதபுர காலத்திற்குரியது 2. பொலன்னறுவை காலத்திற்குரியது
    3. தம்பதெனிய யுகத்திற்குரியது 4. கம்பளை யுகத்திற்குரியது
    5. கண்டி யுகத்திற்குரியது (.......)



24. இங்கு காணப்படுவது எகிப்திய நாகரீகததிற்குரிய பிரமிட்டாகும்.
    1. பாராவோ மன்னனின் ஆத்மாவின் திருப்திக்காக கட்டப்பட்டது
    2. ஆத்மா இறப்புக்குப் பின்பும் தொடர்ச்சியாக வாழும் என்ற நம்பிக்கையில் நிர்மாணிக்கபடப்பட்டது.
    3. இறைவனுக்கு கௌரவப்படுத்தி நிர்மாணிக்கப்பட்டது.
    4. அரசர்களின் பூதவுடலை வைக்க கட்டப்பட்டது
    5. மரணத்தின் பின் இறைவனோடு சேர்வதற்காக நிர்மாணிக்கப்பட்டது. (.......)

25. இங்கு காணப்படுவது சாஞ்சி தோரணமாகும்.
    1. பௌத்த காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது அசோக்க மன்னனால் புணர் அமைக்கப்பட்டது.
    2. பௌத்த கலை வரலாற்றில் சாஞ்சி தூபியை சுற்றி அமைக்கப்பட்டது.
    3. ஸ்தவ யுகத்தில் கந்தளாய் வேலி அமைக்கப்பட்டது.
    4. அசோக மன்னனின் காலத்தில் மரத்தால் அமைக்கப்பட்டு பின்னர் சாத்தவானே காலத்தில் கற்கலால் நிர்மாணிக்கப்பட்டது.
    5. அசோக மன்னன் காலத்தில் தூபியை சுற்றி கல்லால் நிர்மாணிக்கப்பட்டது. (.......)



- **26 – 30 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை F,G,H,I,J எழுத்தில் காட்டப்படும் செதுக்கல்களில் இருந்து தெரிவு செய்க.**




**F**




**G**



**H**



**I**



**J**

26. F எழுத்தால் காட்டப்படும் அவுக்கன புத்தர் சிலையானது.
    1. இந்திய அமராவதி சம்பிரதாயத்திற்குரியது.
    2. இந்திய குப்த சம்பிரதாயத்திறக உரியது.
    3. இந்திய மதுரா சம்பிரதாயத்திற்கு உரியது.
    4. இந்திய காந்தார சம்பிரதாயத்திகுரியது.
    5. இந்தி பல்லவ சம்பிதாயத்திற்குரியது. (.......)

27. G எழுத்தால் காட்டப்படுவது. அசோக தூபியின் உச்சியில் அமைக்கப்பட்டது.
    1. அசோக மன்னனின் யுத்தத்தில் வெற்றிபெற்றதை நினைவுப்படுத்தும் இடமாகும்.
    2. மௌரிய மன்னனில் வசிப்பிட பிரதேசம்.
    3. சாரணாத்த புத்தரின் வசிப்பிட பிரதேசமாகும்.
    4. புத்த பெருமானின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடைய முக்கிய நகரங்களை சார்ந்ததாகும்.
    5. அசோக மன்னன் வாழ்ந்த காலத்தில் வசிப்பிட பிரதேசமாகும். (.......)

28. பிகோட் ஆராய்ச்சியாளரால் இந்த நதிக்கரை நாகரீகத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற H எழுத்தால் காட்டப்படும் சிற்பமானது.
    1. யோகாசன தெய்வம் 2. துர்க்கை சிற்பம் 3. பசுபதி சிற்பம்
    4. கவந்த உருவம் 5. பிரம உருவம் (.......)


29. I எழுத்தால் காட்டப்படும் சிற்பமானது எந்த அரசனைக் குறிப்பிடுகிறது?
    1. மென்குறே அரசனின் சிற்பம் 2. II ம் ராம்செசான் அரசனின் சிற்பம்
    3. நாமர் மன்னனின் சிற்பம் 4. அந்நேபன் மன்னனின் சிற்பம்
    5. டூடன் காமென மன்னனின் சிற்பம் (.......)

30. J எழுத்தால் காட்டப்படும் சிற்பமானது லகுவன் சிற்பமாகும். இது எந்த காலத்திற்குரியது?
    1. சாம்பல்யுகம் 2. ஹெலனிஸ்டிக்யுகம் 3. சம்பாவனி யுகம்
    4. செந்நெறியுகம் 5. புதிய இராசதாணி (.......)


- **31 – 35 வரையான வினாக்களுக்கு K,L,M,N,O ஆகிய சித்திரங்களில் இருந்து தெரிவு செய்க.**




**K**




**L**



**M**



**N**



**O**

31. K எழுத்தால் காட்டப்படும் ஓவியமானது A.C.G.S. அமரசசேகர கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட யகதுருதியனி பேயோட்டியின் மகளான ஓவியமானது,
    1. பெண் ஒருவரின் முக ஓவியமாகும்.
    2. மனிதனின் விசுவாசத்தை காட்டுதல்
    3. வியப்பு பீதி பயம் போன்ற கருப்பொருளை வெளிப்படுத்தல்
    4. நாட்டிய மங்கையை வெளிப்படுத்திக் காட்டுகிறது.
    5. முயற்சியை வெளிப்படுத்தி காட்டுகிறது. (.......)

32. L எழுத்தால் காட்டப்படும் டேவிட் பெயின்டரின் சித்திரம்
    1. மனிதர்களுடைய சுபாவத்தன்மை வரையப்பட்டுள்ளது.
    2. இந்து மத்ததவர் சாயலில் வரையப்பட்டுள்ளது.
    3. இஸ்லாம் மதத்தரவர் சாயலில் வரையப்பட்டுள்ளது.
    4. கிறிஸ்தவ ஓவியங்கள் சுதேசபண்புகளை கொண்டு வரையப்பட்டுள்ளது.
    5. இலங்கை கிராமத்து மக்களை வரைந்துள்ளார். (.......)

33 M எழுத்தால் காட்டப்படும் ஓவியமானது இராஜாரவிவர்மாவினுடையது.
    1. மேலைத்தேயப் பாணிகளை பின்பற்றி இந்திக் கலைப்பாணியில் ஓவியத்தை வரைந்துள்ளார்.
    2. இந்திய எசாபத்திய கலைப்பானியை பின்பற்றி வரைந்துள்ளார்.
    3. கிறிஸ்தவ பாணியை பின்பற்றி இயற்கை முறையில் வரையப்பட்டுள்ளது.
    4. இந்து சமய கலைபாணியில் வரையப்பட்டுள்ளது.
    5. மேலைத்தேய முறையில் வரையப்பட்டுள்ளது.ளளள (.......)

34. N எழுத்தால் காட்டப்படுவது க்லோட்மொனோபினால் வரையப்பட்ட ஓவியமாகும்.
    1. ஒளியியல் வாதம்    2. கனவடிவவாதம்    3. மனப்பதிவு வாதம்
    4. நிழலியல்வாதம்    5. மறுமலர்ச்சி யுகம் (.......)

35. O எழுத்தால் காட்டுவது, அதிதாத்வீக வாசச் (surrelism) சித்திரக்கலைஞரான (Salvador dali) சல்வடோர்டாலி இனால் வரையப்பட்ட (Persistence of memory)ஓவியமாகும்.
    1. பஸ்வாதத்தை வெளிப்படுத்தும் வகையில் வெளிப்படுத்துக.
    2. காட்சியை வெளிப்படுத்தும் பிரஸ்கோ சித்திரமாகும்.
    3. அனைத்த நுட்பங்களையும் பின்பற்றி வரையப்பட்டுள்ளது.
    4. அதிதாத்வீக அகவயயதார்த்தவாதக் கருப்பொருளை நீங்காத நினைவு என்பதை வெளிப்படுத்தி வரையப்பட்டுள்ளது.
    5. பலவகையான இலட்சணங்களை உட்படுத்தி வரையப்பட்டுள்ளது. (.......)

- **36 – 40 வரையான வினாக்ககுள்கு பின்வரும் சித்திரத்தை பயன்படுத்தி விடைகளைத் தெரிவு செய்க.**



36. இந்த ஓவியத்தில் காணப்படுவது.
    1. எம் சார்லிஸ் ஓவியரின் சித்திரம்
    2. ஜே. டி. ஏ பெரேரா
    3. டேவிட் பெயின்டர்
    4. ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர ஓவியர்
    5. ராஜவர்மா ஓவியர் (.......)

37. இந்த ஓவியம் தற்போது காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.
    1. தேசிய அரும்பெரும் காட்சியகம்.
    2. ஜே. டி. ஏ. பெரேரா கலாபவனம்
    3. தனியா காட்சியகத்தில்
    4. நவரங்கலாவில்
    5. தேசிய கலாபவனத்தில் (.......)

38. இந்த ஓவியம் வெளிப்படுத்துவது.
    1. பெண்ணின் மேற்பகுதி
    2. துயரத்தில் இருக்கும் பெண்
    3. நடனமாடும் பெண்
    4. நாகரீக பெண்
    5. நடனநடிகை (.......)

39. இந்த ஓவியத்தை வரைந்த ஓவியர்.
    1. இந்து வெளி நாகரீகத்திற்குரிய பெண்ணை வரைந்தவர்
    2. பப்லோ பிகாசோவை பின்பற்றி வரைந்துள்ளார்.
    3. மேலைத்தேய பெண்களை போன்று வரைந்துள்ளார்.
    4. ஐரோப்பிய ஓவியரின் சாயலையொத்த யதார்த்தவாத போக்கு காணப்படுகிறது.
    5. ஐரோப்பிய மறுமலர்ச்சி யுகத்தை பின்பற்றப்பட்டுள்ளது. (.......)

40. இந்த ஓவியத்தை வரைந்த ஓவியத்தில்.
    1. நடனமாதின் அழகை வெளிப்படுத்தி உள்ளார்.
    2. நடனமாடும் போது ஏற்படும் அசைவு
    3. நடனமாது பற்றிய ஓவியரின் எண்ணக்கரு
    4. நடனத்துக்கு தயாராக இருக்கின்ற போதிலும் முகம் சோகத்தையும் சூழ்ந்த சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது.
    5. நடமானது அசைவு னளினம் என்பவற்றை காட்டுகிறது. (.......)

# தரம் - **12 சித்திரக்கலை - ART II**

- **இப்பகுதி உபபகுதிகள் மூன்றைக் கொண்டது.**
  **ஒவ்வொரு உபபகுதியில் இருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

  - இப்பகுதி உபபகுதிகள் மூன்றைக் கொண்டுள்ளன.
  - ஒவ்வொரு உபபகுதியிலிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையெழுதுக.

**பகுதி - அ**
**சித்திரக் கலையின் மதிப்பீடும் இரசணையும்**
**(இலங்கை)**

01. கட்புல கலை என்பது “கண்பார்வை” என்பன அடிப்படையாகக் கொண்ட கலை ஊடகமாகும். தற்காலத்தில் கட்புல கலை பரந்த பரப்பை கொண்டுள்ளது.

    i. தற்கால கற்புலக் கலையின் கலை நிர்மாணளிப்பு 4 ஐ குறிப்பிடுக. (பு. 4)

    ii. கட்புல கலையின் அடிப்படை அம்சங்களுக்காக மிகவும் முக்கியமானது வடிவமாகும். அதை கருத்திற் கொண்டு சிறு விளக்கம் தருக. (பு. 6)

    iii. கட்புலக்கலையில் சமநிலை, இலயம், தூரதரிசனம் போன்றவற்றை கருத்து புலப்படும் வகையில் விளக்குக. (பு. 10)

02. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட குகை ஓவியங்கள் பல மாகாணங்களில் காணப்படுகிற்ன. இயற்கை கற்குகைகளின் உள்ளே காணப்படுகின்றன. இவ்வாறான 54 குகை ஓவியங்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

    i. கண்டுபிடிக்கப்பட்ட இடங்களின் அதிகமான குகை ஓவியங்கள் அம்பாறை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் ஆகும். இந்த இரண்டு மாவட்டங்கள் தவிர வேறு 4 மாவட்டங்களை குறிப்பிடு. (பு. 4)

    ii. இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால குகை சித்திரங்களில் நுட்பமுறை பற்றி விளக்கம் தருக. (பு. 6)

    iii. பில்லவ, தொரவக்ககுகை, வெட்டம்புகல குகை, ஓவியங்களின் நுட்பமுறை வர்ண உபயோகம் வெளிப்படுமாறு விமர்சனம் செய்க. (பு. 10)

**பகுதி - ஆ**
**கலாசார பின்னணியும் கலை இரசணையும்**
**இந்தியா**

03. இந்து நதிக்கரை நாகரிகம் இந்து நதியைச் சார்ந்த கி. மு. 3000 – 1500 இற்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரியதாக் கருதப்படுகின்றது.

    i. இந்து நதிக்கரை நாகரிகம் சார்ந்த கட்டடகலை ஆக்கங்களை குறிப்பிடுக. (பு. 4)

    ii. இந்து நதிக்கரை கலை நிர்மாணங்களில் விசேட அம்சங்கள் கலையம்சங்கள் மத எண்ணக்கருக்கள் பற்றி உங்கள் கருத்தை விபரிக்குக. (பு. 6)

    iii. இந்து நதிக்கரை நாகரிகம் சார்ந்த கட்டடக்கலை நிர்மாணம் மிகவும் உயர்தரமான இலட்சணங்களடைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த நதிக்கரையில் கிடைக்கப்பெற்ற முத்திரைகளின் கலையம்சங்களை விமர்சிக்குக. (பு. 10)

04. கி. மு 4ம் நூற்றாண்டு இறுதிப்பகுதியில் வட இந்தியாவை ஆண்ட அலெக்ஸாண்டரைத் தோற்கடித்து மௌரிய வம்சம் அசோக அரசன் பேரழிவு காரணமாக சலித்து புத்த மதத்தை தழுவி பௌத்தராகினார்.

i. அசோக அரசனால் நிர்மாணிக்கப்பட்ட சாஞ்சி தூபியின் பிரதான நான்கு பகுதிகளை குறிப்பிடுக. (பு. 4)

ii. சாஞ்சி தூபியில் காணப்படும் அலங்கார நிர்மாணங்களுடன் கூடிய தோரண வாயிலில் பற்றி சிறு விளக்கம் தருக. (பு. 6)

iii. சாஞ்சி, பாருத் செதுக்கல்களில் காணப்படும் ஒத்த எதிர் பண்புகள் பற்றி விளக்குக. (பு. 10)

## பகுதி - இ
## கலாசார பின்னணியும் கலை இரசணையும்
## ஐரோப்பா

05. எகிப்திய கட்டடக் கலை நிர்மாணிப்பின் அடிப்படை காரணமாக விளங்குவது பாராவோ மக்களின் கருத்தானது மரணத்தின் பின்னான வாழ்வு வழிப்பாட்டு நம்பிக்கை எகிப்திய கலை உருவாக காரணமானது.

i. மரணத்துக்குப் பின்புள்ள வாழ்க்கை என்பதில் நம்பிக்கைக்கு முதலிடம் கொடுத்த எகிப்தியர் அமைத்த கட்டிடங்கள் எவை? (பு. 4)

ii. அபுசிம்பெல் தேவாயலயம் கட்டிட நிர்மாணப்பண்புகளை பற்றி சிறு விளக்கம் தருக. (பு. 6)

iii. பழைய இராசதானிக்கு உரிய நாமர் பலகை பற்றி சிறுவிளக்கம் தருவதுடன் பிரமிட் அமைப்பதன் நோக்கம் பற்றியும் சிறுவிளக்கம் தருக. (பு. 10)

06. ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்கள் கி. மு. 40,000 – 10,000 காலப்பகுதிகளுக்குரியவை. இந்த கால ஓவியங்களில் பெரும்பாலாக விலங்குருவங்கள் மனித உருவங்கள் பலவித குறியீடுகள் கருப்பொருளாக உள்ளன.

i. ஐரோப்பிய குகை ஓவியங்கள் வரைவதற்கு அடிப்படை காரணங்கள் 4 ஐ குறிப்பிடுக. (பு. 4)

ii. ஐரோப்பிய குகை ஓவியங்கள் நிர்மாணிப்பில் பாவிக்கப்பட்ட சித்திர முறைப்பற்றி சிறு விளக்கம் தருக. (பு. 6)

iii. ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட கால ஷூவெ குகை ஓவியங்கள் பற்றி விளக்கி அந்த ஓவியங்கள் இலங்கை குகை ஓவியங்களுடன் தொடர்பபடுத்தி விளக்குக. (பு. 10)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

51 T I

# முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
# First Term Test - Grade 12 - 2018

## சித்திரக்கலை - II
## Art II

சுட்டெண் : ........................ காலம் : 3 மணி

- உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் பின் பக்கத்தில் தெளிவாக எழுதுக.
- பரீட்சை மேற்பார்வையாளரினால் ஒழுங்குபடுத்தப்படும் பொருள் தொகுதியை உங்கள் பார்வைக்குத் தென்படும் படி வரைக
- எல்லாப் பொருட்களும் கண்மட்டப்பார்வைக்கு கீழ் இருக்குமாறு ஒழுங்குப்படுத்த மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இல்லாவிடின் வரையத் தொடங்கும் முன்னர் பரீட்சை மேற்பார்வையாளருக்கு இதனை ஞாபகப்படுத்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி உண்டு
- விடைத்தாளினை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானதாகும். ஈரமான வரைதல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ள இடமுண்டு அது உங்களுக்கு பிரதிகூலமாக அமையலாம்.
- வர்ணம் : நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா) பெஸ்டல் வர்ணம் பயன்படுத்தலாம்.
- சுயாதீன ரேகைச் சித்திரம் வரைதல் உங்கள் முன்பாக உள்ள பொருட்களை அவதானித்து வரைந்து வர்ணம் தீட்டுக.
- உங்கள் வரைதாளை மதிப்பிடும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதை கவனத்தில் கொள்க.
- தளத்துக்கு உகந்ததாக கலநுட்பத்துடன் பொருட்களை தொகுக்கப்பட்டிருத்தல்.
- அளவிடைகள், தூரநோக்கு முப்பரிமாண விளைவு பற்றிய உமது விளக்கம்.
- தரப்பட்டுள்ள பொருட்களின் பண்புகளை எடுத்துகாட்டுதல்
- வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற உங்கள் திறன்
- ஒட்டு மொத்த நேர்த்தியும் பொருத்தமான பின்னணியும்.

முக்கியம் : பொருள் தொகுதியை வைத்துள்ள பலகையை பொருள் தொகுதிக்கு ஏற்ப மட்டுப்படுத்தி வரைய உமக்கு சுதந்திரமுண்டு.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

51 T I

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
First Term Test - Grade 12 - 2018

# சித்திரக்கலை - III
# Art III

சுட்டெண் : ........................ காலம் : 3 மணி

**பரீட்சார்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

- **கீழே தரப்பட்ட அ , ஆ , இ பகுதிகளில் ஒரு பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலையங்கத்தை மட்டும் தெரிவு செய்து வர்ணச்சித்திரம் ஒன்றை வரைக.**
- **உமது பரீட்சை சுட்டெண்ணையம் தெரிவு செய்த வினாவின் எண்ணையும் நீர் சித்திரம் வரையும் தாளின் பின்புறத்தில் தெளிவாக எழுதுக.**
- **விடைப்பத்திரத்தை மேற்பார்வையாளர்களுக்கு கையளிக்கும் போது சித்திரம் உலர்ந்திருத்தல் அவசியமாகும்.**
- **ஈரமான சித்திரம் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்வது உங்களுக்கு பாதகமாக அமையும்.**
- **விரும்பிய வர்ண் ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றை கலந்தோ பயன்படுத்த முடியம். (நீர் வர்ணம், பெஸ்டல் வர்ணம், தூள் வர்ணம், போஸ்டர் வர்ணம் )தேவைப்படுவோருக்கு திசுத்தாள் வழங்கப்படும்.**
- **பெலட் பேனைகள் பாவிப்பது தடை கேத்திர கணித கருவிகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும்.**

## அ பகுதி – சித்திர ஒழுங்கமைப்பு

1. அன்னாசி தோட்டம் ஒன்றில் வேலைசெய்யும் ஆண் பெண் விவசாயிகள்
2. சனநெருக்கமான வீதியில் மாறும் மக்கள் சிறுவர் உட்பட வரைய வேண்டும்.
3. மரநிழலில் கூடியிருந்த உணவருந்தும் உழவர் உழுத்தியர்.
4. சித்திரை புத்தாண்டில் கொடுக்கல் வாங்கல்கள் சம்பிரதாய நிகழ்வில் ஈடுபட்டிருப்போர்.

## ஆ பகுதி - அலங்கார ஆக்கம்

5. உங்கள் பாடசாலை பிரதான மண்டபத்தில் முன்னால் கதவருகில் அலங்காரத்திற்காக வைப்பதற்கு பொருத்தமான மரம் பூக்களை பயன்படுத்தி பூச்சாடி ஒன்றுக்கு அலங்காரம் செய்க.
6. அறுகோணவடிவமுடைய வெள்ளியினால் செய்யப்பட்ட ஆபரண பேழை ஒன்றுக்கு முழுதள அலங்காரம் ஒன்றை நிர்மாணம் செய்க.
7. குழந்தை படுக்கை விரிப்பு ஒன்றுக்கு பொருத்தமான அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
8. சம்பிரதாக அலங்காரம் ஒன்றை பயன்படுத்தி வட்ட வடிவான 2 அடி உயரமான உலோக பாத்திரம் ஒன்றுக்கு பொருத்தமான அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.

## இ பகுதி – கிரிபிக் ஆக்கம்

9. “சிறுவர் உரிமை பாதுகாப்போம்” தலைப்பில் 4 வர்ணங்களை பயன்படுத்தி போஸ்டர் நிர்மாணம் செய்க.
10. புதிதாக அறிமுகப்படுத்த உள்ள தாவரங்களால் தயாரிகப்பட்ட பெண்களுக்கான செம்பொ போத்தலுக்கு லேபல் ஒன்றை நிர்மாணம் செய்க.
11. சந்தையில் விற்பனை செய்வதற்கான தேயிலை பெக்கட் ஒன்றுக்கு பொருத்தமான லேபல் ஒன்றை நிர்மாணம் செய்க.
12. வருடாந்தம் நடைபெறும் அழகிய தளதாபெரஹரவை விளம்பரம் செய்ய விசேட சுவரொட்டி ஒன்றுக்கு பொருத்தமான வர்ணத்தை பாவித்து சித்திரம் ஒன்றை நிர்மாணம் செய்க.


**පළමු වාර පරීක්ෂණය 2018 චිත්‍ර කලාව II පත්‍රය - ආදර්ශ චිත්‍ර සටහන**

**முதலாந் தவணைப் பரீட்சை – 2018 சித்திரக்கலை – பகுதி II – மாதிரி பத்திரம்**

**12 ශ්‍රේණිය – தரம் 12**

- වර්ණවත් රෙදි කැබැල්ලක්
- සුදු කොලයකින් ආවරණය කරන ලද බිස්කට් පෙට්ටියක්
- ලීටර් 1 ප්ලාස්ටික් බෝතලය (අඩක් ජලය පුරවා)
- ඇන්තූරියම් කොල 02 ක් හා රතු පැහැති ඇන්තූරියම් මලක්.
- වතුර බොන වීදුරුවක් (අඩක් ජලය)
- තැඹිලි ගෙඩියක්
- ද්‍රව්‍ය තැබීමට ආධාරකයක්.

- வர்ணத் துணி துண்டு
- வெள்ளை கடதாசரியால் சுற்றப்பட்ட பிஸ்கட் பெட்டி
- லீற்றர் 1 பிளாஸ்டிக் போத்தல் (அறைவாசிக்கு நிரப்பட்டிருத்தல்)
- இரண்டு இலைகளுடன் கூடிய சிவப்பு நிற எந்தூரியன் பூ
- தண்ணீர் குடிக்கும் கிளாஸ் (அரைவாசி நீர்நிரப்பி)
- இளநீர் - 1
- பொருட்களை வைக்கும் பலகை



## வடமேல் மாகாணப் பரீட்சைத் திணைக்களம்
## முதலாம் தவணைப் பரீட்சை - **2018** - தரம் - **12**
## சித்திரக்கலை I – ART I
விடைப்பத்திரம்

### பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| **01.** - 5 | **11.** - 1 | **21.** - 1 | **31.** - 3 |
| **02.** - 3 | **12.** - 4 | **22.** - 4 | **32.** - 4 |
| **03.** - 2 | **13.** - 2 | **23.** - 5 | **33.** - 1 |
| **04.** - 2 | **14.** - 3 | **24.** - 2 | **34.** - 3 |
| **05.** - 1 | **15.** - 3 | **25.** - 4 | **35.** - 4 |
| **06.** - 2 | **16.** - 4 | **26.** - 1 | **36.** - 2 |
| **07.** - 4 | **17.** - 2 | **27.** - 4 | **37.** - 5 |
| **08.** - 4 | **18.** - 3 | **28.** - 4 | **38.** - 3 |
| **09.** - 4 | **19.** - 5 | **29.** - 1 | **39.** - 4 |
| **10.** - 2 | **20.** - 3 | **30.** - 2 | **40.** - 4 |

### பகுதி - II

சித்திரக்கலை I பத்திரம் – 40 புள்ளி
II 60 புள்ளி
100 புள்ளி
சித்திரக்கலை II பத்திரம் 100
சித்திரக்கலை III பத்திரம் 100
300 புள்ளி

மொத்தபுள்ளியை 3 பிரித்து இறுதிப்புள்ளி %

விடைப்பத்திரம் II

1. இரேகைக் கற்றலின் போது சுதந்திரமாகவும் கருத்துடனும் இரேகையை கையாளுதல் 20 புள்ளி
2. பரப்பினை கருத்துடன் உபயோகித்துள்ள திறன் 20 புள்ளி
3. பொருட்களின் பிரமாணப் பண்பும் அமைப்பையும் 20 புள்ளி இயல்பையும் வெளிப்படுத்தும் திறன் ~~20 புள்ளி~~
4. கோட்பாடுகளை பின்பற்றுதல் 20 புள்ளி

[illegible]

பகுதி - III

பகுதி - அ

I. தெரிவு செய்த தலைப்பிற்கு பொருத்தமான சூழல் நிகழ்வுகளை வெளிப்படுத்தல் (20 புள்ளி)
II. மனித மெய் நிலைகள் பிராணிகள் உட்பட சகல வடிவமைப்புக்களையும் தளத்தில் படவாக்கம் செய்தல் (20 புள்ளி)
3. இரேகை வடிவமைப்புக்களில் காணப்படும் சிறப்புதன்மை (20 புள்ளி)
4. வர்ண ஊடகத்தை உபயோகித்துள்ள திறன் (20 புள்ளி)
5. பொது பூரணப்பாடு (20 புள்ளி)

பகுதி - ஆ

1. தொனிப் பொருளுக்கு பொருத்தமான புதிய ஆக்கம் திட்டமிட்டுக் கொள்ளல் (20 புள்ளி)
2. பாவனைக்கு உகந்தவகையில் கைத்தொழிலுக்கு பொருத்தமுடையதாக இருத்தல் (20 புள்ளி)
3. பொருத்தமான வர்ணத் தேர்வு உபயோகித்தல் (20 புள்ளி)
4. இரேகை வடிவமைப்புக்களை ஒழுங்குள்ள தன்மையில் உபயோகித்தல் (20 புள்ளி)
5. அலங்கார அழகுடன் நிர்மாணிப்பதன் பூரணப்பாடு (20 புள்ளி)

பகுதி - இ

1. தலைப்பிற்கு பொருத்தமான புதிய உத்திகளை பயன்படுத்தி திட்டமிடல் (20 புள்ளி)
2. தொடர்பாடல் காரியத்தினை ஆற்றல் (20 புள்ளி)
3. வடிவங்களை ஒழுங்கிணைக்கும் போது கலையம்சத்துடன் நிர்மாணித்தல் (20 புள்ளி)
4. வர்ணத்தை தெரிவு செய்தலும் அதனை பயன்படுத்தும் விதமும் (20 புள்ளி)
5. பல்வேறுபட்ட அழகு பிரயோகமான நிர்மாணத்தின் திறப்பாடு (20 புள்ளி)

பகுதி - II விடைப்பத்திரம்

1. ஓவியம், சிற்பக்கலை, கிராபிக் வேலைப்பாடு அச்சுக் கலை திரைப்படம், புடவை மற்றும் ஆடை உற்பத்தி, நிழற்படங்கள்

(2) மேற்பரப்புத் தன்மை
~~இவை மாயத்தோற்றம் மெய்த்தோற்றம் எனப்~~ வகைப்படுத்தப்படும்.

1 எல்லைக்குட்பட்ட இடப்பரப்பு வடிவம் எனக் கருதப்படுகின்றது. இவை இருபரிமாணத்தைக் கொண்டுள்ளது. கேத்திரகணித வடிவங்கள் கேத்திரகணித வடிவங்கள் அல்லாதவை என வகைப்படும்.

(3) நேர்வெளி எதிர்வெளி என இரு விதமாக உபயோகிக்கப்படுகின்றன.
நேர்வெளி: ஒரே நோக்கினையும் உண்மைத் தன்மையையும் புலப்படுத்தும் அதேவேளை எதிர்வெளி அந்நோக்கத்திற்கு புறம்பான பண்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

• மேற்பரப்புத் தன்மை மாயத்தோற்றம் மெய்த்தோற்றம் என இருவகைப்படும்.
பலகை சீமெந்து உலோகம் ஆகிய ஊடகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சிற்பத்தின் மேற்பரப்பு மெய்யான மேற்பரப்பு எனப்படும். இரு பரிமாணத்தை கொண்ட நிர்மாணிப்புகள் அதிகமாக மாயத்தோற்றத்தை கொண்டு காணப்படும். உதாரணம் உலோகச்சாயல் ஒன்றை ஓவியமாக வரைதல் அச்சாயலை மேற்பரப்பு மாயத்தோற்றம் எனப்படும்.

(iii) கலை நிர்மாணிப் பொன்றில் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் ஒழுங்கு முறையில் நிலையான சமநிலைத்தன்மையுடன் கட்டியெழுப்பப்படும்.

* கோலவடிவில் கட்டியமைக்கும் விடயங்களை ஒழுங்கு படுத்துவதால் சந்தம் உருவாகும். உதாரணமாக தாமரை இதழ்களை மீண்டும் மீண்டும் வரைவதால் சந்தம் உள்ள சித்திரம் உருவாக்கப்படும்.
* கலை நிர்மாணிப் பொன்றிலுள்ள கட்புல வெளிப்பாடுகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துதல் இசைவாகும்.
- இது பரிமாண உருவகத்தில் அண்மை சேய்மையை காட்டும் ஒரு முறையாகும். இரேகை தூரநோக்கு இடப்பரப்பு தூர நோக்கு வர்ணம் தூர நோக்கு என இரு வகைப்படும்.
- ~~[illegible]~~ பொருட்களின் தன்மை இருபரிமாணம்
* உருவகத்தில் காட்டப்படுகின்றன. ஒளி நிழல் காட்டல் வர்ண பேதங்களின் உபயோகம் இயரோஸ் ஓரோ முறை முப்பரிமாணத்தை வெளிப்படுத்த உதவுகின்றன.

(2) (i) அநுராதபுரம் பொலன்னறுவை இரத்தினபுரி அம்பாந்தோட்டை கேகாலை

(ii) இலங்கையில் குகை ஓவியங்கள் அதிகமாக காணப்படும் இடம் தொரவக்க தந்திரிமலை, பில்லவ வெட்டம்புகல என்பனவாகும்.

* இந்த ஓவியங்கள் இயற்கை கற்குகைகளின் சுவர்களிலும் கூரையமைப்புகளிலும் கீறல்கள் விடப்பட்ட உருவங்களை காணலாம்.
* இவ்வுள்ள ஓவியங்களை வரைய விரல்கள் அம்புகள் நசிக்கப்பட்ட அழுத்த கம்புகளை என்பவற்றை உபகரணங்கள் வரைய பயன்படுத்தினர்.
- சில ஓவியங்கள் தடிப்பாக வர்ணம் பூசப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

வெள்ளை, சாம்பல், சிவப்பு மஞ்சள் வர்ணங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
இரேகைகளை மையமாகக் கொண்டு ஓவியம் வரையப்பட்டுள்ளது.

* குகைச் சித்திரங்கள் 2 வகைப்படும்

(i) இயற்கை உருவவடிவங்கள் (ii) அருவவடிவங்கள்

(iii) பில்லவ குகை அநுராதபுர மாவட்டத்தில் மகாவிலச்சிய எனும் பகுதியில் பில்லவ கிராமத்தில் அமைந்துள்ளது.

* உட்சுவரில் இரேகைச் சித்திரங்களும் வெள்ளை நிறத்தினால் வர்ணமிடப்பட்ட சில ஓவியங்களும் உள்ளன.

* மனித உருவங்கள், விலங்குருவங்கள் கேத்திர கணித வடிவங்கள் என்பன இவற்றுள் காணப்படுகின்றன.
* இவை கீறுதல் அல்லது சுரண்டுதல் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
* இம்மனித உருவங்கள் மனையாளர்கள் உருவம் எனக் கொள்ளக்கூடிய ஓர் உருவம் அடையாளம் காணப்படாத நிலையிலேயே உள்ளன.
* மனையாள் உருவம் வெள்ளை நிறத்தினால் காட்டப்பட்டுள்ளது.

* கேகாலை மாவட்டத்தில் பெலிகல் கோரளையில் தொரவக்க எனும் கிராமத்தில் இக்குகை அமைந்துள்ளது. இது கி.பி. 1919 இல் பிரௌனிங் இனால் முதல் முறைக் கண்டு பிடிக்கப்பட்டது.
* இங்கு கேத்திர கணித வடிவங்கள் விலங்குருவங்கள் என்பன காணப்படுகின்றன. இவை கீறுதல் சுரண்டல் மூலம் நிர்மாணிக்கப்பட்டது.
* 57 கேத்திர கணித வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
* இங்கு யானையும் பெரும் ஓர் உருவம் செய்யப்பட்டுள்ள தெரிகிறது.

---

* அம்பாறை மாவட்டத்தில் தியம்பலாவெவ நாதேவத்தில் கிடிவேயாய எனும் கிராமத்தில் இக்குகை அமைந்துள்ளது.
இது 40 மீற்றர் அளவில் நீளமுடையது.
* உட்சுவரில் பல வடிவங்களான மனித உருவங்கள் விலங்குருவங்கள் கேத்திர கணித வடிவங்கள் காணப்படுகின்றன.
இங்கு ஏராளமான வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. இதில் யானைவடிவங்கள் பல உள்ளன.
யானை உருவங்கள் வெள்ளை சாம்பல் மஞ்சள் சிவப்பு சார்ந்த மஞ்சள் வர்ணம் பாவிக்கப்பட்டுள்ளது.
* இது தந்தங்களை கொண்ட யானை உருவம் சிறப்பானது.
கேத்திர கணித வடிவங்களை இயற்கையாக நீர் நிரம்பிய இடங்களை வரைந்துள்ள விதம் தெளிவாக உள்ளது.
வெள்ளை சாம்பல் எனும் வர்ணங்களே பாவிக்கப்பட்டுள்ளது.

(3) (ஆ) பகுதி.

(3) ஆடம்பரமற்ற சிறிய பெரிய மாடி வீடுகள் இயற்கையான, நீர்த்தடாகம் பாறை கல்வெட்டுக்கள் தானிய களஞ்சியம்.

(11): இந்த சிகிரியா நாகரீக ஓவியங்கள் 2000க்கு மேல் கிடைக்கப்பட்டுள்ளது.
சிற்பங்களால் செய்யப்பட்டவை நடனமாது தேவி உருவம் தாய் தெய்வம் உருவம் செய்ய ஆலயங்களுக்கானவை.
அநேகமான சிற்பங்கள் அரசர்கள் காலங்களில் அவர்களுடைய மத வழிபாடு நம்பிக்கைகள் சார்ந்த உருவங்கள் பிரதிபலிக்கின்றன.

இச் சிற்பங்களை நிர்மாணிப்பதற்காக பல்வேறு
உடைகள் மற்றும் கலை நுட்பங்களை
பாவித்திருப்பதோடு அவர்கள் தன்மை
மற்றும் கலைவண்ணங்கள் ஒன்றுக்கொன்று
வேறுபடுகின்றன.
இந்து நாகரீகத்தில் சிற்பங்கள் சுடுமண்
வெண்கலம் மற்றும் பல்வேறு கற்களை
உபயோகித்து பல்வேறு கலை நுட்பங்களைக் கொண்டதாக
செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இந்து நாகரீக சிற்பங்களாவன
மண்படிவம் (சுடுமண் உருவம்)
நடனமாது வெண்கலப்படிவம், பூசாரி உருவம்
தாய்த் தெய்வம், முத்திரைகள்
மொகஞ்சதாரோ, லோதால், சென்குதாரோ, ஹரப்பா
போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
இங்கு கிடைத்த முத்திரைகள் மேல், மக்களின்
வளர்ச்சி பெற்ற கலை ஆக்கத்திறனை வெளிப்படுத்துவன.
கலை போன்ற சமய வெளிப்பாடுகள் மற்றும் சமூக
தகவல்கள் வெளிக்காட்டப்படுகின்றன.
பல்வேறு விலங்கு உருவங்கள் குறியீடுகள்
மற்றும் மனித உருவங்கள் காணப்படுகின்றன.
நடனமாது உருவம்
ஹரப்பாவில் கண்டெடுத்த வெண்கலத்தினால்
செய்யப்பட்ட இது இந்து நாகரீக மக்களின்
உலோக தொழில்நுட்ப ஆற்றலை எடுத்துக்காட்டு
கின்றது. மொகஞ்சதாரோ நகரில் நிர்மாணிக்கப்பட்
டது.
கி.மு. 2500 – 1500 க்கு இடைப்பட்ட காலத்திற்கு
உரியது. தலை முடி நிர்வாணமாக
இடது கையில் வளையல்கள் அணிந்த நிலையில்
உள்ளது.

பூசாரி உருவம்
மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளை,
சுண்ணாம்புக் கல்லினால் செதுக்கப்பட்ட இடுப்பு
மேல் பகுதியுடைய ஆண் உருவமாகும்.
தட்டையான மேல் உதடுகள் ஒடுங்கிய நெற்றி
தலையின் பின்புறத்தைக் காட்டும் தலை மற்றும்
நீண்ட அரைவாசி திறந்த கண்களைக் கொண்டதாக
ஆக்கப்பட்டுள்ளது. கலைப் பாணியின் இயல்புகளை
வெளிப்படுத்துகின்றது. தலையில் நெற்றிப்பட்டை
அணியப்பட்டுள்ளது. இது தோளை மூடிய
மேலாடை பூ வடிவங்களைக் கொண்ட ஆடையும் உள்ளது.
ஒரு தோள் மூடிய ஆடை மற்றும் அரைவாசி திறந்த
கண்கள் தியான நிலையில் அமைந்த தன்மை
போன்றவை மத பூசாரி என்பதை காட்டுகின்றது.

(04) மேதிய, கர்பம், ஹர்மிக ஸ்தூபி [illegible] யஷ்டிய

(ii) சாஞ்சித் தோரணம் பாதுகாப்பிற்காகவும் அலங்காரத்திற்காகவும் அமைக்கப்பட்ட தோரணம் உள்ளது.
சாஞ்சி தோரணம் அசோக மன்னனுடைய காலத்தில் மரத்தால் அமைக்கப்பட்டன பின்னர் சாதவாகன காலத்தில் கல்லால் நிர்மாணிக்கப்பட்டது.
தோரணத்தின் உயரம் 34 அடியாகும்.

* பாரிய சதுர வடிவிலான இரு தூண்களை அருகருகே இருக்குமாறு உள்ள போன்று, கம்பங்களால் இணைக்கப்பட்டுள்ளன. அக்கம்பங்கள் 3 சிறிய கற்றூண்களால் செங்குத்தாக இணைக்கப்பட்டுள்ளன.
* அடிப்பகுதியிலுள்ள பாரிய கற்றூண்களில் பொறிப்பு இடத்தில் யானைகள் சிங்கங்கள் [illegible] உருவங்கள் காணப்படுகின்றன.
* கற்றூண்களில் சாலபஞ்சிகா எனப்படும் கிளைகளை கையில் ஏந்திய யக்ஷி பெண்ணுருவம் காணப்படுகிறது.

உடலியத்: எனப்படும் கம்பங்களின் மீது சிங்கம் யானை குதிரை பசு சிறப்பு உருவங்கள் உள்ளன. உச்சியில் தர்மசக்கரமும் இரு அந்தங்களில் மேல்மனிதனை அடையாளப்படுத்தி திரிசூலமும் காணப்படுகின்றன.

(iii) புத்த பெருமானுக்கு பதிலாக குறியீடுகள் உபயோகிக்கப்பட்டமை பொதுத் தன்மையாகும்.

* இரண்டு இடங்களிலும் செதுக்கல்கள் காணப்படுகின்றன. ஒரு பாகம் செதுக்கப்பட்ட வடிவ சட்டகத்தினுள் பாரதன நிகழ்வுகள் சில ~~[illegible]~~ ஜாதகக் கதைகளாக வெளிப்படுகின்றன
* சாஞ்சி தூபம் செங்குத்தாக அமைந்த தூண்கள் கிடைப்பாலங்கள் கிடைப்பாலங்களுக்கு இடையில் காணப்படும் சிறு தூண்கள் யாவற்றிலும் செதுக்கல் காணப்படுகிறது.
* சாஞ்சி தோரணத்தின் செதுக்கல்களில் பாலி - மியாங்கு தன்மையுடையவை.
பாரிய செதுக்கல்களில் உயர்ப்புத் தன்மை நுணுக்கமான தன்மை அலைப் போக்குடனான தன்மை எனபன இரண்டும் காணப்படுகின்றன.
* இரண்டு இடங்களிலும் யக்ஷி (பெண்) ஆண் பெண் உருவங்கள் காணப்படுகின்றன.
* எப்படியும் இந்த இரண்டு இடங்களிலும் பல மெய் நிலைகளை கொண்ட மேனி உருவங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் சிற்பியின் திறமை புலப்படுகிறது.

II பகுதி,

5 (i) பிரமிட் , தேவாலயம் போன்றவை அமைந்து காணப்பட்ட கல்லறைகள்

(ii) அபுசிம்பல் தேவாலயம் இரண்டாம் ரெம்சிஸ் அரசனால் கல்லால் கட்டப்பட்ட பிரமாண்டமான தேவாலயம். இது கி.மு 13ம் நூற்றாண்டுக் காலத்திற்குரியது
* கேத்திர கணித வடிவங்களுடன் கூடிய இவ்வாலயத்தின் வாயிலின் இரு புறத்திலும் பாரிய அளவிலான சிற்பங்கள் .4 உள்ளன.
* தூய கடவுள் என்ற எண்ணக்கருவுடன் அமைக்கப்பட்டு கட்டப்பட்டது.

(iii) நாமர் பலகை எகிப்திய கலையின் மிகவும் பழமை வாய்ந்த கலையாக்கங்களுள் ஒன்றாகும்.
இது பழைய இராசதானிக்கு உரியது.
25 அங்குலம் அளவான உயரமான இப்பலகையின் இரு பக்கமும் இரு புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.
· நாமர் அரசனின் போர் வெற்றியை இங்கு இதில் சிற்பங்கள் இங்கிட்டு வடிவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.
பலகையின் ஒரு பக்கம் கீழே வடக்கு எதிரியை தலைமயிர் பிடித்துக் கொண்டிருக்கும். நாமர் மன்னனைக் காண முடிகிறது! கீழே தோல்வுறிய படையினர் மேலும் இரண்டு எதிரிகள் காணப்படுகின்றனர். மேற்பகுதி ஹோரஸ் கடவுளை குறிக்கும் பருந்தொன்று காணப்படுகின்றது.
* பலகையின் மற்றப் பக்கத்தில் இருப்பது நாமர் மன்னர் ஆவார். அவர் இடை பணியாளர்களுடன் ஊர்வலத்தில் செல்லும் காட்சி காட்டப்பட்டுள்ளது.
- ஏனைய உருவங்களை விட நாமர் மன்னரின் உருவப் பெரிதாகக் காணப்படுவது விசேட அம்சமாகும்

இந்த பலகையில் நீண்ட கழுத்துடன் கூடிய புராணமான விலங்குருவங்கள் இரண்டு உள்ளன. அவை மாறுபட்ட தெளிவில்லாத ஒரு வெற்றியின் இயல்பினை நம்பப்படுகிறது.

மிசோ பொட்டேமியா பாரோவோ மக்களின் வாழ்க்கை முறையுடன் (மரணத்தின் பின்னரான வாழ்வு) தொடர்புபட்ட நம்பிக்கை முறைகளே எகிப்திய கட்டடக் கலை உருவாக அடிப்படையாக அமைந்தன.
பாரோவோ மன்னர்கள் அவர்களது நாளாந்த வாழ்க்கை அவர்களது வழிபாட்டுத் தெய்வங்கள் பாரோவோ மன்னர்க்கு பணியாளர்கள் என்பன சிற்பங்கள் சித்திரங்கள் தொனிப்பொருளாகும்.
நாமர் அரசனின் போர்வெற்றியைக் இங்கு இதில் சிற்பங்கள் இங்கிட்டு வடிவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

6 (i) வேட்டையாடுதல் அதிகரித்தல்
ஆவிகளைக் குறித்து பூஜை செய்தல்
பொழுதைக் கழித்தல்
வேட்டையாடுதலை இலகுவாக்கிக் கொள்ளல்.

(ii) ஐரோப்பிய பாரம்பரியத்தில் ஏற்பட்ட கால ஓவியங்களில் வெளிப்படையாக விலங்குருவங்களை மனித உருவங்கள் பலவற்றை இனங்காணக் கூடியதாக உள்ளன.

* சுவர்களில் இருந்த, விலங்குக் கொழுப்பு, சாம்பல், கரி, மண், தாவரப் பகுதிகள் என்பன கொண்டு வர்ணங்களை உருவாக்கிக் கொண்டனர்.
* ஓவியங்களை வரைய பயன்படுத்திய தூரிகைகள் கோட்டுச் சித்திரம், வர்ண ஓவியங்கள் ~~அப்பாறை~~ கற்பாறையைக் கீறி சுரண்டி நிர்மாணித்தல் வாயால் ஊதல் அச்சுப்பதித்தல் போன்ற வகையில்

(iii) இக் குகை பிரான்சின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இக்குகை ஓவியங்கள் கி.மு. 32000 காலப்பகுதிக்கு உரியவை என கருதப்படுகின்றது. இவ் ஓவியங்களில் வெளிப்படையாக விலங்குகளே அமைகின்றன. அதாவது குதிரைகள் சிங்கங்கள் பனிமான்கள் காண்டாமிருகங்கள் கரடிகள் ஆந்தைகள் ஆகியவை இவைகளுள் அடங்குகின்றன.

* விலங்குகள் கூட்டமாக ஓடுவது இதன் சிறப்பம்சமாகும்
* வர்ண ஓவியங்கள் கோட்டுச் சித்திரங்கள் கற்பாறையைச் சுரண்டிச் செய்த செதுக்கல்கள் அச்சுப்பதித்த கை அடையாளங்கள் காணப்படுகின்றன கோட்டுச் சித்திரம் - சிவத்த நிறமுள்ள பகுதியை மட்டுப்படுத்தி சிறு பிள்ளையினால் அச்சுப்பதித்த கால் காணப்படுகின்றது ஓநாய் கூட்டம் இருந்த இடத்தில் சென்றது போல் நிலையில் உள்ள நரியின் உருவம் உள்ளன.

2. இலங்கையில் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ளன. இலங்கை கற்குகைகளின் சுவர்களிலும் கூரைகளிலும் ஓவியங்களைக் காணலாம்.
கோடுகளைப் பயன்படுத்தி உருவங்கள் வரையப்பட்டுள்ளன.
சாம்பல் வெள்ளை கபில நிறங்கள் கூடுதலாக பாவிக்கப்பட்டுள்ளன கற்பாறை ஆழமாக சுரண்டி அல்லது கீறி உருவங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவை வேறு இடங்களிலும் காணப்படுகின்றன.
மான்களும் மனித உருவங்களும் வேறு பொருட்களும் வரையப்பட்டுள்ளது.

மாணவர்கள் விடைகளுக்கு ஏற்ப புள்ளி வழங்குக.


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න